## சரியான விடையைத் தெரிவு செய்க.

1 ஒரு பலகையின் $\frac{5}{9}$ பாகம் வெட்டப்பட்டது. மீதம் இருந்த பலகையின் நீளம் 3.2 மீட்டர். அப்படியானால் வெட்டப்படுவதற்கு முன் அந்தப் பலகையின் நீளம், cm இல், எவ்வளவு?


A 720

B 576

C 400

D 256

2. படம் 1, ஓர் இரவு வேளையில், ஒரு புத்தகக் கடை மூடப்பட்ட நேரத்தைக் காட்டுகிறது.




படம் 1

அந்தக் கடையில் 9 மணி 45 நிமிடம் வியாபாரம் நடைபெற்றது.
அந்தக் கடை திறக்கப்பட்ட நேரத்தைக் கணக்கிடுக.

A 12.30 a.m.

B 1130 a.m.

C 12.30 p.m.

D 11.30 p.m.

3. அருண், சிவம், பாலன் ஆகியோர் ஒரு கணிதத் தேர்வில் பெற்ற சராசரி புள்ளிகள் 85 ஆகும். பாலன் பெற்ற புள்ளி 75 எனின் அருண் மற்றும் சிவம் பெற்ற புள்ளிகளைக் கணக்கிடுக.

A 80, 85

B 85, 90

C 80, 95

D 85, 95

4 அட்டவணை 1, ரோஸ்னா வாங்கிய பொருள்களின் நிறைவு பெறாத விற்பனைச் சீட்டைக் காட்டுகிறது.

| எண்ணிக்கை | பொருள் | ஒன்றின் விலை | விலை |
|---|---|---|---|
| 2 | புத்தகப் பை | RM62.50 | |
| 1 | காலணி | | |

அட்டவணை 1

ரோஸ்னா RM155 வைத்திருந்தார். அவரிடம் காலணி வாங்குவதற்கு RM65 குறைவாக இருந்தது.
அப்படியானால் அந்த காலணியின் விலை என்ன?

A RM30

B RM63

C RM95

D RM188

5 ஒரு கலன் நிறைய சுவை பானம் தயாரிக்க $\frac{3}{4}\ell$ நீரும் $\frac{2}{5}\ell$ எலுமிச்சைச் சாறும் தேவைப்பட்டது.
அதே போன்று 8 கலன்கள் சுவைபானம் தயாரிக்க மொத்தம் எத்தனை லிட்டர் நீரும் எலுமிச்சைச் சாறும் தேவைப்படும்.

A 2·8

B 9·2

C 10·8

D 12·4

6 ஒரு புட்டி மாம்பழச் சாறின் விலை RM28.80 ஆகும். ஒரு சிறப்பு விற்பனையின் போது 3 புட்டி மாம்பழச் சாறு வாங்கினால் ஒரு புட்டி மாம்பழச் சாறு இலவசமாக வழங்கப்பட்டது. மதன் 48 புட்டி மாம்பழச் சாறு வாங்கினார் எனின் அவர் செலுத்த வேண்டிய தொகையைக் கணக்கிடுக.

A RM1 468.80

B RM1 296.00

C RM1 1036.80

D RM 1460.80